12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்
அவர்கள் அருளியது

*அன்புச் சேவுக! - தொகுப்பு 2*

# இ.ம.இ. ஒரு விடுதலை இயக்கமே !





இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி,
ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.

## இந்து இலக்கியக் கழக வெளியீடு

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,118 **ஆனி** மாதம்.

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

## அன்புள்ள சேவுக!

**சென்ற மாத இதழ் போல இந்த இதழிலும் குருதேவர் தனது தலைமை மாணுக்கர் திரு நெ.சேவுகனுக்கு எழுதிய அஞ்சல்களில் குருதேவர் அறிக்கையில் அச்சான அஞ்சல் கட்டுரைகளின் தொகுப்பு வெளியாகின்றது. குருதேவர் அறிக்கை 20 முதல் 27 வரை உள்ள அறிக்கைகளில் வெளியாகிய 'அன்புச் சேவுக!' அஞ்சல் வடிவக் கட்டுரைகள் இந்த வெளியீட்டில் உள்ளன.**

"பத்தியாளர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் விரும்புகிற குடும்ப ஆண்டவர்கள், குல தெய்வங்கள், கிராமத்து தேவர் தேவதைகள், நாட்டுக் கடவுள்கள் முதலியவர்களிடமும்; அலைந்து திரியும் காற்று, கருப்பு, பேய், பிசாசு முதலியவற்றிடமும் பத்தி செலுத்துவதற்காக தங்களுடைய வசதி வாய்ப்புகளுக்கும், விருப்பங்களுக்கும் ஏற்ப பலி பொருள்களையும், படையல் பொருள்களையும், மற்ற பூசனைப் பொருள்களையும் படைத்து தம் விருப்பம் போல் குரல் எழுப்பியும், பாடல் பாடியும், கருவிகளை இசைத்தும், ஆட்டங்கள் ஆடியும் பரவிடுதற்குரிய நெறிகளாக பூசை நெறிகள், வணங்கும் நெறிகள், வழிபடும் நெறிகள், கும்பிடும் நெறிகள் எனும் நான்கு வகை நெறிகள் திட்டவட்டமாக விளக்கமாக அருளப்பட்டுள்ளதை தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி ஏற்று, ஒப்புக்கொண்டு விருப்பத்தோடு செயலாக்குபவர் நிறைவான பயனைத் துய்ப்பர்."

**இருக்கு வேதம் காண்டம்-1, மண்டலம்-47,**
**நாள் உரைக்கோவை வாசகம்-5.**

[குருதேவர் அறிக்கை: 20]

# குருதேவர் எழுதியவைகளே நமது பாடப் புத்தகங்கள்

அன்புச் சேவுக!

(1) நம் நாட்டில் முதலாளிகள் ஏறத்தாழ நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது பேர்கள் இருக்கிறார்கள். அனைத்துக் கோயில்களிலும், விழாக்களிலும் கூட்டம் கூட்டமாகக் கலந்து கொள்ளும் மக்கள் நிறைய இருக்கிறார்கள். எண்ணற்ற மத நிறுவனங்கள், இயக்கங்கள், மதத் தலைவர்கள், மதக் கலைஞர்கள், மதப் பத்திரிகையாளர்கள், மதப் பேச்சாளர்கள், மத எழுத்தாளர்கள் ...... இருக்கிறார்கள். எங்குப் பார்த்தாலும் அடிக்கடி மதத்தின் பெயரால், சிறிய பெரிய கூட்டங்களும், விழாக்களும், கதை நிகழ்ச்சிகளும், கலை நிகழ்ச்சிகளும், பிறவும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. ஏறத்தாழப் பூசைக்கென்று தனியிடம் இல்லாத வீடே இல்லை, பூசைப்படம் மாட்டப்படாத கடையே இல்லை. இந்த அளவு நமது நாடு மதவாதிகள் மிகுந்த நாடாகத்தான் இருக்கிறது.

ஆனால், இந்த நாட்டின் சமுதாய சீர்திருத்தவாதிகள், அரசியல்வாதிகள், இலக்கியவாதிகள், தமிழார்வமுடையோர் ...... எனப்படுபவரெல்லாம் உதட்டளவில் நாத்திகக் கருத்துக்களையே மிகுதியாகப் பேசித் திரிபவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், தொடர்ந்து கால் நூற்றாண்டாக நாத்திகப் போக்கும், நோக்கும் உடையவர்களே நமது அரசியலில்

ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். என்ன காரணம்? எது காரணம்? எப்படிக் காரணம்? எவ்வளவு காலம் காரணம்? என்னென்ன முயற்சிகள் காரணம்? ...... என்பதையெல்லாம் ஆராய வேண்டும்.

இம்மாபெரும் சுமை நமக்கு இருப்பதால்தான் நாம் கழுத்து நோக, விழி பிதுங்க, மூச்சுத் திணற மெல்ல நிதானமாக நடைபோடுகிறோம். இதனைப் பிறரும், நாமும் புரிந்தும் புரியவைத்தும் செயல்படக்கூடிய சூழ்நிலையை எப்படியாவது உருவாக்கியே ஆக வேண்டும். ஆனால் அது அறிவியல் பூர்வமாக இருக்க வேண்டும்.

(2) நண்ப! நமது பத்தர்கள், மதவாதிகள், மதத்தால் வயிறு பிழைக்கும் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் முதலியோர்கள் வேண்டாவெறுப்பாக நாற்றம் அடிக்கும் குப்பையை நறுமணமிக்க மலரைத் தரும் செடிகொடிகளுக்கு உரமாக, கையால் அள்ளியள்ளி தூறில் (செடி அடியில்) வைத்துப் பணிபுரியும் ஆட்களைப் போலவே, மதத்தைத் தங்களுடைய வாழ்க்கையின் நன்மைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

அதாவது, பெரும்பாலான மதவாதிகள் உதட்டளவில் மதம் மடமையானது, மூடநம்பிக்கை மிகுந்தது, ஆபாசங்கள் மிகுந்தது, அறிவுக்கு அப்பாற்பட்டது, தவிர்க்க முடியாத தீயது என்ற கருத்தை எல்லாம் கூறியபடியேதான் மதத்தைப் பயன்படுத்தி வாழ்கிறார்கள். இதற்குக் காரணம் மதத்தைப் பற்றிய முறையான வரலாறு, நிறைவான தத்துவம், முழுமையான இலக்கியம், பொறுப்பான பயிற்சி, பொறுமையான சிந்தனை, உண்மையான

மத உணர்வு, நேர்மையான மதச் சிந்தனை, ஒழுங்கு படுத்தப்பட்ட மத வாழ்க்கை, மதக்கலைகளில் பயிற்சி, மத குருமார்களிடம் தொடர்பு, ..... முதலியன இல்லாமை, மதத்தைப் பற்றிய அச்சம் கூச்சம் இச்சை, வேற்றுமொழியில் மதத்தைச் செயல்படுத்துதல், அன்னியர்களை மதத் தலைவர்களாக ஏற்றல், ..... முதலிய தவறுகள்தான். எனவே, இத்தவறுகளை அகற்றிடும் முயற்சி விரிந்தும், விரைந்தும் துவக்கப்பட்டே ஆக வேண்டும்.

(3) நமது மதவாதிகள் கண்மூடிப் பத்தர்களாக, ‘எல்லாம் கடவுள் செயலாக’ ஏற்கும் மந்தகதி உடையவர்களாக, புதுமை நாட்டமோ, புரட்சி நம்பிக்கையோ இல்லாதவர்களாக இருக்கிறார்கள். எனவேதான், ஒலிபெருக்கியோ, விளம்பரமோ இல்லாமல் எல்லாக் கோயில்களிலும் நம்மவர்கள் கூடி ஒருவர் இருவர் என்று நின்றுவது நமது வெளியீடுகளை உரக்கப் படித்துக் காட்ட வேண்டும். விற்பனைக்காக நமது வெளியீடுகளைக் கடைவிரிக்க வேண்டும். மக்களின் ஐய வினாக்களுக்கும் பதில் கூறிச் சிறுசிறு சொற்பொழிவுகள் நிகழ்த்துதல் வேண்டும்.

(4) பொழுதுபோக்கும் கழகங்கள் நடத்துவது போலவே பல பணக்காரர்களும், சிலசில இலக்கியச் செல்வாக்கு உடையவர்களும், மதச் சபைகள், மன்றங்கள், வாரவழிபாட்டு அமைப்புகள் சிறுசிறு தொடர் இலக்கிய விழாக்கள் ...... நடத்தி வருகிறார்கள். இவர்கள்தான் மதத்தை மயக்கப் பொருளாக, பிற்போக்குச் சத்தியாக, புரியாத துறையாகக் காப்பாற்றுவார்கள். எனவே, இவர்களிடமிருந்து மதத்தைக் காப்பாற்றிப் பகுத்தறிவுப் போக்கும், சமுதாய நலநோக்கும், விஞ்ஞானச் சூழலும் உடையதாக்கிடல் வேண்டும்.

(5) மதவாதிகள் தங்களுடைய நூல்களும், தலைவர்களும் சமத்துவத்தை, பொதுவுடமையை, கூட்டுறவை, வட்டி வாங்காமையை, சுரண்டாமையை, ஏமாற்றாமையை, வேறுபாடு பாராட்டாமையை, பிறரை அடிமைப்படுத்தாமையை .... என்று எண்ணற்ற உயர்ந்த தத்துவங்களைக் கூறுவதற்காகக் கூறுவார்கள். ஆனால், யாருமே இவற்றைச் செயலாக்கும் ஆர்வத்தையோ, நம்பிக்கையையோ, விரும்பி ஏற்றுப் போற்றும் பக்குவத்தையோ பெற்றிருக்கவில்லை. எனவேதான், நமது மதம் ஏட்டுச் சுரைக்காயாக, கற்பனையாக, பழங்கதையாக, கவைக்கு உதவாததாக இருக்கிறது. இதனை மாற்றும் ஏட்டறிவும், பட்டறிவும், புரட்சியுள்ளமும் உடைய மதவாதிகள் ஏறத்தாழத் தோன்றவே இல்லை என்றுதான் கூற வேண்டும்.

(6) நண்ப! மத சம்மந்தமான அனைத்து விழாக்களிலும், நிகழ்ச்சிகளிலும் நம்மவர்கள் மதரீதியாகவே, சமுதாய, பொருளாதார, இலக்கிய, கலை, அரசியல் சிந்தனைகளை வளர்க்கும் வண்ணம் சொற்பொழிவாற்ற வேண்டும். இதற்குத் தேவையான பாடப் புத்தகங்கள் இதுவரை நாம் வெளியிட்டு இருக்கும் அறிக்கைகளும், அறிவிக்கைகளும், புத்தகங்களும், மாதந்தோறும் வெளிவரும் குருதேவர் இதழுமேயாகும்.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

[குருதேவர் அறிக்கை: 21]

# தமிழ் இன மொழி நாட்டு வரலாற்றினை நம் தமிழர்களை உணர வைப்பதே நமது இயக்கக் கொள்கை

அன்புச் சேவுக!

இன்றைய நிலையில், நாம் இன வெறியையோ! மொழி வெறியையோ! மத வெறியையோ! வன்முறை வெறியையோ! தூண்டி விடுவதாகவோ, ஊக்குவிப்பதாகவோ எளிதாகக் குற்றம் சாட்டப்பட்டு விடலாம். எனவேதான், நாம் மிகமிகத் தெளிவாகவும், விளக்கமாகவும், நேரடியாகவும் நமது கொள்கைகள், குறிக்கோள்கள், திட்டங்கள்...... முதலியவற்றை விளக்கியேயாக வேண்டும். இதற்காகவே நாடெங்கும் கையெழுத்துப் பிறதி நூலகங்கள் துவக்கி வைக்கின்றோம்; நம்மவர்கள் தனித்தோ! குழுக்களாக இணைந்தோ வசதி வாய்ப்புப்படி அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களிலும், பிற பொது இடங்களிலும் கூடி நின்று உரையாடல் முறையிலும், விளுவிடை முறையிலும், கலந்துரையாடல் விவாத முறையிலும்; நம்மையும், நமது இயக்கத்தையும் அறிமுகப்படுத்த வேண்டும் என்று முயலுகின்றோம். இவற்றைப் புரிந்தும் புரியவைத்தும் தொடர்ந்து மேற்படிச் செயல்கள் நிகழுமாறு செய்வதுதான் இன்றைய தேவை!

நண்ப! நாம், திருவள்ளுவர், திருமூலர், சமயக்குரவர், சங்கராச்சாரியார், பெரியார் ஈ.வெ.ரா., புத்தர், மகாவீரர்,

ஏசு, முகம்மது நபி, காரல் மார்க்சு, கரம்சந்த் மோகன்லால் காந்தி ...... முதலிய அனைவரின் சிறப்பு இயல்புகளை எல்லாம் நமது தாயகத்து மக்களுக்குத் தேவையான அளவு எடுத்துக் கூறியே செயல்படுகின்றோம்.

தமிழினத்திற்கே உரிய 'இந்து' என்ற சொல்லையும், இதற்குரிய பொருளையும் புரிந்து கொள்ள முயலாமலே வெறுப்பது; பிற இனத்தவர்களும், பிற மதத் தலைவர்களும், பிற மொழிகளுந்தான் உயர்ந்தவர்கள் என நினைக்கும் அப்பாவித் தனம்.......... முதலியவைகள் அனைத்தும் முழுமையாக அகற்றப்படுவதற்குரிய முழுமையான முயற்சிதான் இக்கலி உகத்தில் தோன்றிய பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோற்றுவித்த 'இலக்கியப் புரட்சி' ['தத்துவப் புரட்சி', 'கருத்துப் புரட்சி', 'எண்ணப் புரட்சி'].

அதாவது மதத் துறையில் தோற்றுவிக்கப்பட்ட தீயவைகளும், காலப்போக்கில் தோன்றிய தீயவைகளும்தான் நமது மக்களின் வீழ்ச்சிகளுக்கும் தாழ்ச்சிகளுக்கும் காரணம் என்பதை முழுமையாக உணர்ந்ததால்தான்; இரு பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் 'குருபாரம்பரியம்' என்ற பெயரால் மத வரலாறும், 'இலக்கியப் பாரம்பரியம்' என்ற பெயரால் சமுதாய வரலாறும், 'அரச பாரம்பரியம்' என்ற பெயரால் தமிழ்நாட்டு அரசியல் வரலாறும் எழுதித் தொகுத்துக் கருத்துப் புரட்சியைத் தோற்றுவித்தனர்.

இப்படி அவர்கள் இலக்கியக் கருவூலத்தைத் தந்து விட்டுச் சென்றுள்ள காரணத்தினால்தான், நம்மால் அவற்றை எளிதில் அறிந்து, புரிந்து, பகுத்து, வகுத்துச் செயல்பட ஏதுவாக

அமைகின்றது. இந்த எழுத்துலகத் தொகுப்பேதான் நமது புரட்சிக்குரிய ஆயுதங்கள். இவைகளேதான் நாம் எதிர்காலத்தில் நிகழ்த்தப் போகும் அருளாட்சிக்குரிய போர்ப்பாசறைகளாகவும், பாடிவீடுகளாகவும் அமையும்.

நமது மொழி, இன, நாட்டு வரலாற்று இலக்கியங்களை நம்மவர்கள் படித்துணர்ந்தால் போதும்; முதலில் நம்மவர்கள் அறிவொளியும், அகவொளியும் பெற்றுத் திகழ்ந்திடுவார்கள். மக்களின் அறியாமையையும், கோழை மனத்தையும், கூலி மனப்பான்மையையும் ..... போக்க இக்கருத்துக்களை மக்களிடையே மேடைப் பேச்சாக வழங்க வேண்டும். நமது இயக்கப் பணி அல்லது கொள்கை அல்லது திட்டம் என்பது வேறொன்றுமல்ல; நமது இன மொழி நாட்டு வரலாற்றினை நமது தாயகத்து மக்களை உணர வைப்பதே ஆகும்.

இம்மாபெரும் பணிக்குத் தயாராகும் நம்மவர்கள் கையில் பிடித்திருக்கும் வாள்களும், வேல்களும், விற்களும் நமது இலக்கியங்களேயாகும் என்னும் கருத்துச் சிந்தனை வளம் பெற்றதாக இருக்க வேண்டும்.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

**[குருதேவர் அறிக்கை: 22]**

# <u>தமிழ் மொழிக்கே அருளை ஊற்றெடுக்கச் செய்யும் ஆற்றல் உண்டு!</u>

அன்புச் சேவுக!

மதம்தான் அக வாழ்வுக்குரிய பண்பாட்டையும், புற வாழ்வுக்குரிய நாகரீகத்தையும், சமுதாய இயக்கத்துக்குரிய அரசியல் சித்தாந்தத்தையும் உருவாக்கிக் காத்துப் போற்றிப் பேணி வளர்த்து வருகிறது. எனவேதான், **'மதமே அனைத்துக்கும் தாய்'**, **'மதமே பண்பாட்டுக்கும் நாகரீகத்துக்கும் மூலக் கரு'**, **'மதமே கலையும் அறிவியலும் வளர்க்கப்பட்ட தொட்டில்'** ....... என்ற கருத்துக்கள் வலுவாக வளமாகச் செழித்து வருகின்றன.

இப்படிப்பட்ட மதத்தையே வழியாக, வழித்துணையாக, வழிகாட்டியாக ஏற்றுத்தான் மனித வாழ்வில் மாற்றங்களையோ, ஏற்றங்களையோ, தோற்றங்களையோ விளைவிக்க முடியும். எனவே, யாராக இருந்தாலும் தங்களை மதவழியாகச் சிந்திக்கும் சிந்தனையாளர்களாகத் தயாரித்துக் கொண்டால்தான் பயனுள்ள சாதனைகளைச் சாதிக்க முடியும்.

இந்த அரிய, கூரிய, சீரிய, சிறந்த பயன்மிக்க மதத்தின் உயிரே மொழியில்தான் இருக்கின்றது. எனவே, எந்த ஒரு மதமானாலும்; அது பிறப்பிக்கப்பட்ட அல்லது பிறப்பெடுத்த மொழியில்தான் அதனுடைய முழுமையான ஆற்றலும், விளக்கமும், பயனும் கிடைக்கும். எனவேதான் நெடுங்காலமாகக் கிறித்தவ மதம் தனது வேத நூலான 'திரு பைபிளையும்', பிற கருத்துக்களையும், சடங்கியல்களையும், மத நடைமுறைகளையும், ஒழுகலாறுகளையும் இப்ரூ (Hebrew) மொழியிலும், இலத்தீன் (Latin) மொழியிலுமே

வைத்துக் காத்திட்டது. இதேபோல், இசுலாமும் தனது வேதநூலான 'திருக்குரானையும்', மற்றபடி உள்ள மதத்தொடர்பான அனைத்துச் செய்திகளையும் அராபிய (Arabic) மொழியிலும், பாரசீக (Persian) மொழியிலுமே பாதுகாத்திட்டது.

ஆனால், உலகம் முழுவதும் நாடு கடந்து, மொழி கடந்து, இனம் கடந்து இந்த இரு மதங்களும் பரவியதால், பிற மொழியாளர்களும் மதத் தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் ...... புரிந்து கொள்ளுவதற்காக அனைத்தையும் அனைத்து மொழிகளிலும் மொழி பெயர்த்துத் தாராளமாக வழங்கிட்டார்கள்.

**இதனைப் பின்பற்றி இந்துமதத்தின் தலைவர்களாகத் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளும் பிருமணர்களும், பிருமண ஆச்சாரியார்களும், பீடாதிபதிகளும், மடாதிபதிகளும் ஏன் சமசுக்கிருத மொழியிலுள்ள மத இலக்கியங்களை மொழிபெயர்த்துத் தர முன்வரவில்லை?**

- வெளிநாட்டார்களில் மாக்சு முல்லர் (Maxmuller), பர்ரோ (T.Burrow), டாயின்பீ (Toynbee), கோல் (G.H.Gole) ..... போன்று சிலர் சமசுக்கிருத இலக்கியங்களை உலகறியச் செய்ய மொழி பெயர்ப்புக்களைப் படைத்தார்கள். ஆனால், அவை சரியானவையல்ல! உண்மையானவையல்ல! ஆழமான பொருளை வழங்க வில்லை! ..... என்றே மேற்படி பிருமணர்கள் விமர்சனங்களை வழங்கி இருட்டடிப்புச் செய்து விட்டனர். இந்தப் போக்கு ஏன்? ஏன்? ஏன்?

நண்ப! தமிழ் மொழியிலிருந்து திருடப்பட்ட அல்லது கடன் வாங்கப்பட்ட தத்துவங்களும் சித்தாந்தங்களுமே சமசுக்கிருத மொழியில் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, வேதம், உபநிடதம், சுருதி, ஆரணம், ஆகமம்...... எனப்படுபவை எல்லாமே ஏறத்தாழ ஒலிநயத்தை மட்டுமே நல்கக் கூடிய பொருளற்ற வெற்றுச் சொற்களின் கூட்டமேயாகும். எனவே, இவை மொழிபெயர்க்கப் பட்டால் கேலிக்கும்,

கேள்விக்கும் உரிய நிலையையே வடஆரிய வேதமதமான ஹிந்துமதம் பெற்றிடும். இவற்ருல்தான் மொழி பெயர்ப்பை மறுத்தும், வெறுத்தும், எதிர்த்தும் வருகின்ருர்கள் பிறமண்ணினரான பிருமணர்கள்.

இப்படிப்பட்ட சூழலில்தான் நாம், நமது தமிழ்மொழிப் பூசாமொழி வாசகங்களை வெளியிட்டிடல் வேண்டும். இவற்ருல், தமிழ்மொழிக்கு அருளை அநுபவப் பொருளாக ஊற்றெடுக்கச் செய்யும் ஆற்றலுண்டு என்பதை மெய்ப்பிக்கலாம்.

நண்ப! நாம் பழங்காலத்தில் பயன்பட்டிட்ட இந்துமதத்தை மட்டும் மக்களுக்குச் சொல்லாமல் சாக்கிரடீசு, தாந்தே, கதே, இயேசு, முகம்மது நபி, காரல் மார்க்சு, ஏங்கல்சு, இலெனின், மாசேதுங், தொல்காப்பியர், திருமூலர், திருவள்ளுவர், யக்ஞவல்லி, வியாசர்கள், வால்மீகிகள், கம்பர்கள், பெருந்தேவனர்கள், இராமலிங்க அடிகளார், பெரியார் ஈ.வெ.ரா ....... முதலியோர் கூறியுள்ளவைகளையும் கூறியேயாக வேண்டும். அப்பொழுதுதான் இன்றைய நாட்டுநடப்பில் உயிர்த்துடிப்பும், உண்மையும், உற்சாகமும், ஊக்கமும், உட்கிடக்கைமிகு உழைப்பும், சுறுசுறுப்பும், விறுவிறுப்பும் பிறப்பிக்கப் படுவதற்குரிய புதியதோர் தத்துவம் பிறந்திடும்.

மானுட நல உரிமைக்காக நமது செயல்களின் முதல் கட்டமாகத் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்ற முக்கோண எல்லைக்குள் நமது செயல்களை உருவாக்கிடுவோம். நாம் எதையும், எவரையும், எப்போதும் சந்திக்க, சிந்திக்கத் தயாராக இருப்போம்.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரூர்**

[குருதேவர் அறிக்கை: 23]

# தமிழர்களுக்கும் ஓர் இக்கட்டான போராட்ட நிலைமை உருவாக வேண்டும்

அன்புள்ள சேவுக!

இன்றைய நாட்டு நிகழ்ச்சிகளை உற்று நோக்கிடு. இரண்டுக்கும் மேற்பட்ட பட்டங்களைப் பெற்ற ஆசிரியப் பெருமக்கள் நூறுயிரம் பேர்களுக்கும்மேல் வெஞ்சிறையில் ஒரு மாத காலத்துக்கும் மேலாக வாடி வதங்கித் திரும்பியிருக்கிறார்கள். இவர்களில் பதினறு பேர்கள் பலியாகியிருக்கிறார்கள்; எண்ணற்றோர் உடல்நலத்தையும், உளநலத்தையும் இழந்து திரும்பியிருக்கிறார்கள். ஆனல், 'போராடித்தான் எதையும் பெற முடியும்' - என்ற கருத்தை முழுமையாகப் பெற்றே திரும்பியுள்ளார்கள் இவர்கள். தனிமனிதர், குடும்பம், சமுதாயம், அரசியல், சீர்திருத்தம், போராட்டம், புரட்சி, ... என்ற சொற்களைப் புரியவும், புரிய வைக்கவும் முற்படுவார்கள்.

உடல்வலிமை பற்றிய கவலையின்றி இரவுபகலாகப் படித்து; அறிவு வளத்தை மட்டும் பெருக்கிக் கொண்ட ஆசிரியர் சமூகத்துக்கு வெஞ்சிறைக் கொடுமை ஒரு பெரிய அதிர்ச்சி, பயிற்சித் துவக்கம். அதாவது, முறையாகவும், நிறையாகவும் கற்றுத் தேர்ந்த ஆசிரியர் சமூகத்துக்கும், அரைகுறையாகக் கற்றுத் தேர்ந்த அனைத்துத் தலைமைச் சத்திகளுக்கும் இடையே ஏற்பட்ட நேரடிப் போரே இது. இதனல், 'படித்தவர்களுக்கும் படியாதவர்களுக்கும் இடையே போர் விளைந்தால்தான் நியாயம் பிறக்கும்' - என்ற செயல்சித்தாந்தம், நாற்றங்காலில் விதைக்கப்பட்டுப் பயிராக்கப்படும் விவசாயம் துவங்கியிருக்கிறது.

எப்படியோ!.... ? ஆசிரியர் சமுதாயம் போராட்ட உணர்வையும், போராட்டப் பண்பையும், போராட்ட நம்பிக்கையையும், போராடும் பழக்கத்தையும், ....... கற்றுக்கொள்ள வேண்டிய அல்லது வளர்த்துக் கொள்ள வேண்டிய நிலைமை வந்துவிட்டது. இனிமேல்தான், ஆசிரியர் சமுதாயம் ஏட்டுலகையும், நாட்டுலகையும் இணைக்கும் மாபெரும் பணியில் ஈடுபட்டிடும். அதாவது, இனிமேல், வயிற்றுப் பிழைப்புக்குரிய கல்வியையே வழக்கமாக வழங்கும் நிலை மாறி; சமுதாய அநீதிகளையெல்லாம் அகற்றும் மெய்ஞ்ஞானக் கல்வியின் வித்துக்கள் விதைக்கப்படும் நிலையே வளர்ந்திடும். அதனால், ஆசிரியர்-மாணவர் உறவும், ஆசிரியரின் பாட்டாளி வர்க்க உணர்வும் பொலிவுமிக்க வலிமையோடு செழித்தோங்கி வளரும். எனவே, பொதுவாக இனிமேலாவது ‘உழைக்கும் வர்க்கம்’ என்ற உணர்வோடு ஆசிரியர் கட்டுப்பாடும், விழிச்சியும், எழிச்சியும், செழிச்சியும் பெற்றிடுவர்.

இதேபோலத்தான், தமிழர்களுக்கும் ஓர் இக்கட்டான போராட்ட நிலைமை உருவாக வேண்டும். அப்போதுதான், இந்துமதத் தத்துவத்திலும், வரலாற்றிலும் உண்மையான பற்றும், முறையான பயிற்சியும், நிறைவான தேர்ச்சியும் விளைந்திடும். அதாவது, இந்துமதத்தை ஏற்றுக் கொண்ட தன்மானத் தமிழனுக்கும்; அரைகுறை இந்துமத அறிவும், பற்றும், பயிற்சியுமுள்ள அப்பாவித் தமிழர்களின் போலித் தலைவர்களுக்கும் இடையே நேரடியான போராட்டம் துவங்கிடல் வேண்டும். அப்பொழுதுதான், தமிழர்கள், தங்களுடைய மொழியுரிமை, இனஉரிமை, பண்பாட்டுப் பெருமை, நாகரீக அருமை, சமுதாயக் கட்டுக்கோப்பு, சுயமரியாதை, தன்னம்பிக்கை, ...... முதலிய அனைத்துமே இந்துமதத்தின் வளவளர்ச்சியிலும், வலிமைப் பொலிவிலும்தான் இருக்கின்றது என்ற பேருண்மையைக் கற்றுக் கொள்ள நேரிடும்.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரூர்**

[குருதேவர் அறிக்கை: 25]

# கருகுலம் ஓர் அருளுலகப் பல்கலைக் கழகமே!

நண்ப! இன்றைய தமிழக நிலைகளை உற்றுப் பாருங்கள். ஏறத்தாழ எல்லா நிலையினரும், வகையினரும், தரத்தினரும், திறத்தினரும், ...... அமைதியாக, நிம்மதியாக, சமாதானமாக ..... வாழுகிறார்கள். ஆனால், இது உண்மையான அமைதியில்லை, நிம்மதியில்லை, சமாதானமில்லை. அதாவது, பெரும்பாலான மக்கள் அடிப்படையான (உணவு, உடை, வாழிடம்) தேவைகளுக்காக ஏங்கியும், நொந்தும் வாடி வதங்கி, அடங்கி ஒடுங்கிக் கிடக்கிறார்கள்.

இவர்களும், ஓரளவு (நடுத்தர நிலையினர் Middle Class) வசதியுள்ளவர்களும் தங்களுக்கு ஆபத்து வந்து விடக் கூடாது; எப்படியாவது எதைச் செய்தாவது தங்களது குடும்பத்தைக் காப்பாற்றினால் போதும்..... என்ற அச்சத்திலேயே எதைப் பற்றியும் விமரிசிக்காமல், கவலைப்படாமல், நடைப்பிணமாக வாழுகிறார்கள்.

இந்தப் பேருண்மையை உணர்ந்த அனைத்துத் துறைத் தலைவர்களும், முன்னணியினர்களும் மக்களைச் சுரட்டி, உருட்டி, மிரட்டி, அச்சுறுத்தியும், இச்சகம் பேசியும் செயல்படுகிறார்கள். இதன்மூலம், இந்தத் தலைவர்கள் தங்கள் விருப்பம் போல் பதவி, புகழ், பணம், ..... முதலியவற்றைக் கொள்ளையடித்துச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். எனவேதான், நாம் எவ்வளவு

எழுதினாலும், பேசினாலும், தொண்டு புரிந்தாலும்,...... நம் பக்கம் கூட்டம் சேரவில்லை! நமது இயக்கம் வலுப்பட வில்லை!

நண்ப! மேற்படிப் பேருண்மைக்குப் பரிகாரமாகத்தான்; நமது கருகுலம் ஓர் அருளுலகப் பல்கலைக் கழகமாகச் செயல்படப் போகிறது. அதாவது மருத்துவர், வழக்குரைஞர், பொறியியல் வல்லுநர், எழுத்தர், அதிகாரி, .... எனப்படுபவர்களை எந்தப் பல்கலைக் கழகமும் உருவாக்கிட முடியும். எவர் வேண்டுமானாலும் எப்படியாவது மேற்படிப் பட்டங்களைப் பெற முடியும். ஆனால், அருளை அநுபவப் பொருளாக வழங்கவல்ல அருளாளர்கள், நீதிகளை நிலைநிறுத்தும் அருட்பட்டத்தவர்கள், நேர்மை, ஒழுங்கு, கட்டுப்பாடு, தொண்டு, கடமையுணர்வு, கண்ணியம், தோழமை, அன்பு, நட்பு முதலிய நற்பண்புகளை விளைவிக்கும் அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல்வீரர்கள், வழிபாட்டு நிலையங்களை அருளூற்றுக்களாக மாற்றும் அருட்கலை வினைஞர்கள், மொழி உணர்வு, இன உணர்வு, பொதுவுடைமை உணர்வு, சமத்துவ உணர்வு, சகோதரத் தத்துவ உணர்வு, ...... முதலியவைகளை நமது குருதேவரால்தான் உருவாக்க முடியும்! உருவாக்க முடியும்! உருவாக்க முடியும்!

எனவே கருகுலம் எனும் அருட்பல்கலைக் கழகத்தில் (The Divine University) பட்டம் பெற்றவர்கள் தன்னம்பிக்கையும், ஒற்றுமையும், ஒருமைப்பாடும், சமத்துவமும், சகோதரத் தத்துவமும், நட்பும், தோழமையும், பாச உறவும், அன்பும், பிணைப்பும், .... உள்ளவர்களாக வாழத் தயாராக வேண்டும்! தயாராக வேண்டும்! தயாராக வேண்டும்!

நண்ப! நல்ல மருத்துவர்கள் என்று தயாராகிறவர்கள், என்னென்ன நச்சுப் பொருள்கள் இருக்கின்றன? என்னென்ன நல்ல மருந்துகள் இருக்கின்றன, .... என்பதைத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். இதுபோலவேதான், யாமும் நல்ல அருளாளர்கள், அருட்கலை வினைஞர்கள், அ.வி.தி. செயல்வீரர்கள், கொள்கை முழக்கப் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், ....... முதலியோர் அருளுலகின் ஆக்கக் கலைகளையும், அறிவியல்களையும், அழிவுக் கலைகளையும் குருவருளால் பெற்றுச் சிறக்குமாறு செய்து வருகிறேன். இதில் சாதி மத வெறியோ, ஏழை பணக்காரன் என்ற வேறுபாடோ, வேண்டியவர் வேண்டாதவர் என்ற சார்போ, .... கடைப்பிடிக்கப் படவே இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை.

ஆனல், நம்மவர்களுக்கிடையில் ஒருவரையொருவர் ஏவல், பில்லி, சூன்யம், செய்வினை, வசியம், மாரணம், தேய்வு, முடக்கம், நலிவு முதலிய அழிவு வேலைகளைச் செய்து தாக்கிப் போர் புரிவதாக அச்சமும், ஆச்சரியமும், மாச்சரியமும், அவலப் புலம்பல்களும், குற்றச் சாட்டுகளும் கிளம்பியுள்ளன. இது மாபெரும் சோதனையே! தாங்க முடியாத வேதனையே! ..... வருந்துகிறார் குருதேவர்! திருந்துக!

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

**[குருதேவர் அறிக்கை: 26]**

# தமிழருக்குத் தமிழர்தான் குருவாக இருக்க வேண்டும்

அன்புச் சேவுக!

நீ, இந்தியத் துணைக்கண்டத்து ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் ஒட்டுமொத்த மாநாட்டில் கலந்து கொள்ள தில்லி மாநகர் சென்றிருக்கிறாய். உன் அனுபவம் தெற்கேயும் வடக்கேயும் ஒப்புநோக்கச் செய்திடும். ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களிடையே வறுமையும், பற்றுக்குறையும், ஏக்க நிலையும், நோய் நிலையும் ஆதிக்கம் செலுத்தும் பொழுது; புற வாழ்க்கையைப் போல்தான் அக வாழ்க்கையும் இருண்டிருக்கும். எனவே, வழிகாட்டும் சுடராய்! கலங்கரை விளக்கமாய்! அகவிருள் அகற்றும் அருட்பெருஞ் சோதியாய்! விளங்க வேண்டிய ஆசிரியப் பெருமக்கள் முற்றிலும் அணைக்கப்பட்ட கரிக்கட்டைகளாக இருப்பதைக் காணலாம். இதற்குமேல், கட்டிடமே இல்லாத பள்ளிகள்; ஆசிரியரே இல்லாத பள்ளிகள்; ஓராசிரியர் பள்ளிகள்...... என்று பெயரளவில் உள்ள பள்ளிகளுக்கும்; அப் பள்ளிவாழ் மாணவர்களுக்கும் இடையேயுள்ள உறவுகளையும், உரிமைகளையும் ஆராய்ந்து புரிந்து கொள்.

நண்ப! தெற்கே, பள்ளிக்கூடத்துக்கே போகாத வடலூர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் அருட்பாக் கொடைவள்ளல் இராமலிங்க அடிகளாரையும்; கல்கத்தா காளிகோயில் பூசாறி

இராமகிருட்டிணப் பரமஅம்சரையும் ஒப்பிட்டு நோக்கி ஆய்வு செய்திடு.

இரண்டு பேருமே ஏறத்தாழ எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளாதவர்கள்தான். இரண்டு பேருக்குமே கடவுள்கள் நேரில் தோன்றி வரமளித்தார்கள். தென்னுட்டு இராமலிங்க அடிகளாருக்கு முறையே சிதம்பரத்தில் நடனமிடும் கூத்தர்ப் பெருமான், திருத்தணிகை வாழ் முருகன், திருவொற்றியூர் வடிவுடைய மாணிக்கவல்லி...... முதலியோர் நேரில் தோன்றி அனைத்து வகையான அருளையும் வழங்கினர்கள். ஆனல், வடநாட்டு இராமகிருட்டிணப் பரமஅம்சருக்குக் காளிதேவி மட்டுமே நேரில் தோன்றி அருள் வழங்கினள்.

இராமலிங்க அடிகளார் பிறவியிலேயே மரக்கறி உணவு மட்டுமே உண்பவர் - காலப்போக்கில் பயிற்சித் தேர்ச்சியாலும், முயற்சி முதிர்ச்சியாலும் உண்ணுவன பருகுவன அனைத்தையும் நிறுத்தி அருவுருவ அமுதத்தேகம் பெற்ருர். ஆனல் இராமகிருட்டிண பரமஅம்சரோ பிறவியிலேயே மீனும் கறியும் உண்ணும் பூசாறியாகப் பிறந்தவர்; கடைசிவரை காளிக்கும், சுடுகாட்டுப் புதைகாட்டுத் தெய்வங்களுக்கும், தாந்தரீகப் பூசைகளுக்கும் படையலாகப் பயன்படுத்திய இறைச்சியையும் மீனையும் உணவாக உண்டே உலகியலாகச் சத்திதேவியின் வடிவமாக வாழ்ந்தவர்.

இராமலிங்க அடிகளார் ஈ எறும்பு மொய்க்காத, நோய் நெருங்காத பொன்வண்ண ஞானதேகம் பெற்றிட்டார்; அருட்பெருஞ் சோதியாகி மறைவான இறையோடு எங்கும்

நிறைந்திட்டார். இராமகிருட்டிணரோ உலகியலாக மனித தேகத்தோடு வாழ்ந்து மாண்டிட்டார்.

இந்த, இருவேறு அருளாளர்களையும்; தென்னாடு வடநாடு என்ற இருபெரும் நாட்டுப் பிரிவுக்கு இலக்காகக் கொண்டு விளக்கம் தேடினால்; இராமகிருட்டிணர், உலகம் முழுவதும் அறியப்பட்ட அருளாளராக நிறுவன நிர்வாக அமைப்புக்களோடு வளர்ந்துள்ளார். ஆனால், இராமலிங்க அடிகளாரோ தென்னாடு எனும் நான்கு மாநிலங்களில் மூன்று மாநிலத்தாருக்கு யாரென்றே தெரியாமலும்; தமிழ்நாட்டிற்குள் உள்ள (ஏறத்தாழ) இருபது மாவட்டத்தார்களில் இரண்டு மூன்று மாவட்டத்தார்களுக்கு மட்டுமே ஓரளவு தெரிந்தவராய் இருக்கின்ற இரங்கத்தக்க நிலையையும் எண்ணிப் பார்த்திடுக. அப்பொழுதுதான், தமிழர்கள் எப்பொழுதுமே, தங்களுடைய மொழியையோ! இனத்தையோ! நாட்டையோ! பண்பாட்டையோ! நாகரீகத்தையோ! மதிப்பதில்லை! மதிப்பதில்லை!! மதிப்பதில்லை!!! மதிப்பதேயில்லை! விரும்புவதில்லை! விரும்புவதில்லை!! விரும்புவதில்லை!!! விரும்புவதேயில்லை என்ற பேருண்மை விளங்கிடும்.

அதாவது எப்படியோ தமிழர்களுக்குக் கூலிச் சிந்தையும், அடிமை நெஞ்சமும் ஏற்பட்டுத் *"தங்களுக்கு அன்னியர்கள்தான் தலைவர்களாக இருக்க வேண்டும்"* என்ற கருத்தும் விருப்பமும் ஏற்பட்டுவிட்டது. இதைத் திருத்த முற்படுபவர்களே நாம்; என்ற உணர்வில் செயல்படு, பிறரைச் செயல்படுத்து.

**அன்பு**

**இந்துமதத் தந்தை**

**குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரூர்**

[குருதேவர் அறிக்கை: 27]

# இ.ம.இ. ஒரு விடுதலை இயக்கமே

அன்புச் சேவுக,

1. நாம் பதிப்பகம் வைத்து பல்லாயிரக்கணக்கான அறிவிக்கைகளை அச்சிட்டு அன்னை நாட்டு மக்களுக்கு பட்டி தொட்டி, குக்கிராமம் முதல் பெரியபெரிய ஊர்கள், நகரங்கள் என்று அனைத்து இடங்களிலும் எந்தவித வேறுபாடுமின்றி வழங்கி வருகின்றோம். இதில் நம்மால் சாதிவெறியோ, மதவெறியோ, வட்டாரவெறியோ ஊக்குவிக்கப்படவேயில்லை. இருந்த போதிலும், நம்மை நமது தாயக மக்களே முழுமையாகப் புரிந்து கொள்ள இயலாமல் தேக்கநிலை ஏற்பட்டிருக்கிறது, இதற்குக் காரணம் நம்முடைய அறிவிக்கைகள் வழங்கும் தத்துவமும் சித்தாந்தமும் முழுமை வடிவில் மக்களைச் சென்றடையவில்லை என்பதுதான்.

2. மேற்படிக் கருத்தை நமது நிறுவன நிர்வாக உறுப்பினர்கள் ஆராய்ந்து 'குருதேவர்' என்ற பெயரில் நமது இயக்கத்தவர்க்கு மட்டும் வழங்குவதற்குரிய அறிக்கை ஒன்றினை மாத மலராக வெளியிடும் திட்டத்தைச் செயலாக்கினர். இதனால் இம்மாதத்தோடு இருபத்தாறு (26) மலர்கள் வெளிவந்திருக்கின்றன. இது ஒரு மாபெரும் சாதனையே. இந்தியத் துணைக்கண்டத்திலேயே இப்படித் தத்துவத்தையும், செயல்சித்தாந்தத்தையும், கொள்கையையும், குறிக்கோளையும், கொள்கைவிளக்க முழக்கங்களையும், இயக்கப்

பாரம்பரிய வரலாற்றினையும் தெளிவாக எழுதி அச்சிட்டு கொடுத்திருக்கக் கூடிய ஒரே ஒரு இயக்கம் நமது இயக்கம்தான்.

உலக அளவில் பொதுவுடமைச் சித்தாந்தத்தை மேலை நாட்டினர்க்கு முதன்முதல் விளக்கிய **(கீழைய நாடுகளில் பொதுவுடைமைச் சித்தாந்தம் என்றென்றும் இருந்து வருகின்றது. அதாவது, சித்தர்நெறி எனப்படும் இந்துமதம்தான் மிகச் சிறந்த பொதுவுடமைத் தத்துவம், கம்யூனிசம் என்பது மேலைநாட்டார்க்கு இன்னும் தெரியாது.)** காரல் மார்க்சு அவர்கள்தான் தமது இயக்கத்திற்குத் தத்துவத்தையும், சித்தாந்தத்தையும், கொள்கையையும், குறிக்கோளையும், கருத்து விளக்க முழக்க வாசகங்களையும் எழுதி வழங்கினர். எனவேதான் அது உலக முழுவதும் பரவியது.

இப்பொழுது அதைவிடச் சிறந்த நமது சித்தர்நெறி [The Siddha Philosophy] என்கின்ற சமுதாயத் தத்துவம் [The social philosophy], அரசியல் தத்துவம் [The political philosophy], பொருளாதாரத் தத்துவம் [The Economical philosophy] நம்மால் ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் [Both theoretically and practically], ஓர் இயக்க வடிவமாக [In the form of a Movement] வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, நமது இந்து மறுமலர்ச்சி இயக்கம் [The Social Renaissance Movement] ஒன்றுதான் இந்தியத் துணைக்கண்டத்திற்கும், இந்த மண்ணுலகுக்கும் வளமான வருங்காலத்தை விளைவித்து கொடுக்கும் ஆற்றலுடையது. இப்பேருண்மையினை நம்மவர்கள் நன்கு புரிந்தும் புரியவைத்தும் செயல்படுவதைப் பொறுத்துத்தான் நமது வளவளர்ச்சியும், வலிவுச்

செழுச்சியும் இருக்கிறது. இதற்காக நம்மவர்கள் இதுவரை வெளிவந்துள்ள குருதேவர் அறிக்கைகளை மட்டுமாவது அடிக்கடி திருப்பி திருப்பி நன்கு படித்து கொள்கைத் தெளிவு பெற வேண்டும்.

3. நண்ப! ஒரு காலத்தில் மதம்தான் அரசியல், கலை, இலக்கியம், மருத்துவம், தொழில், நீதி, சமுதாயச் சட்டதிட்டக் கட்டுப்பாட்டு முறைகள் முதலிய அனைத்துக்கும் தலைமை தாங்கி வழி நடத்தியது. ஆனால், இந்த மதம் கடுமையான ஒழுங்கு, ஒழுக்கம், நேர்மை, நீதி, நியாயம், மனிதத்தன்மை..... முதலிய பண்பு நலன்களைச் செயலாக்கியது. எனவே இதனுடைய பிடியிலிருந்து, நேரடியான ஆட்சியிலிருந்து தப்பித்துக் கொள்ள அல்லது முறித்துக் கொள்ள அல்லது விலகியோடிட மேற்படி அனைத்துத் துறைகளும் மிகப்பெரிய போராட்டங்களையும் போர்களையும் செய்ய நேரிட்டது. ஆனால், அவைகள் வெற்றி பெற முடியவில்லை.

எனவே அவைகள் மதத் தலைவர்களின் மீதும், மதத் தத்துவங்களின் மீதும், மத வரலாறுகளின் மீதும், மத இலக்கியங்களின் மீதும், மதச் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளின் மீதும், நடைமுறைகளின் மீதும், சித்தாந்தங்களின் மீதும், சடங்கியல்கள் மீதும், மத நாயகர்களாக விளங்கிடும் அனைத்து வகையான கடவுள்களின் மீதும், கண்மூடித்தனமான தாக்குதல்களை நிகழ்த்த ஆரம்பித்தன.

4. நண்ப, இங்குதான், நாம் மிகமிக நிதானமாகவும், பொறுமையாகவும், பொறுப்பாகவும், அமைதியாகவும், அடக்கமாகவும், மிகமிகத் தெளிவாகவும் கருத்துக்களையும்

செய்திகளையும் விளக்கி வழங்கிடல் வேண்டும். ஏனெனில் ஈவிரக்கமின்றி, நீதி நேர்மையின்றி...... அரசியல், கலை, இலக்கியம் சமுதாயம்...... முதலிய அனைத்துத் துறையினரும் மதத்தை மறைமுகமாகவும், நேரடியாகவும் இழித்தும், பழித்தும், கேவலப்படுத்தியும், சிதைத்தும், சீரழித்தும் முறையற்ற குறுக்கு வழிப் போரைத் தொடர்ந்து நிகழ்த்திட்டார்கள்.

அதன் விளைவுதான், மதம் வீழ்ச்சியுற்றது, இகழ்ச்சியுற்றது, தாழ்ச்சியுற்றது, செல்வாக்கிழந்தது, செயல்நலம் குன்றியது. மற்ற துறைகள் மதத்தைக் கேவலப்படுத்தியும், இழிவுபடுத்தியும் தொடர்ந்து பேசியும் எழுதியும் வரலாயின. இதனால் அரசியல்வாதிகளும், சமுதாயவாதிகளும், இலக்கியவாதிகளும், கலையுலகவாதிகளும் மதத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார்கள். இந்த விடுதலையால் இவர்கள் எல்லாவிதமான தவறுகளையும் நியாயப்படுத்தி விட்டார்கள்.

அதாவது களவு, கொள்ளை, காமம், நிர்வாக ஊழல், கள்ளச்சந்தை, (இலஞ்சம்) கையூட்டு முதலிய அனைத்தையும் தாங்கள் செய்யலாம், ஆனால் மதவாதி செய்யக் கூடாது என்பது போன்ற மாயாவாதத்தை உருவாக்கி விட்டார்கள். இதன்படிதான் இன்றைக்கும் மதவாதிகளைப் பற்றி மட்டுமே போலிகள், முறைகேடர்கள் என்ற குற்றச்சாட்டிற்கு உள்ளாக்கி வருகிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால் எல்லாத் துறையினருமே கடவுள்களையும், புராண இதிகாசங்களையும், சாத்திறச் சம்பிறதாயங்களையும், சடங்குகளையும், ஒருசில மதவாதிகளின் சாதாரணத் தவறுகளையும் மிகமிகப் பெரிய அளவில்

கேவலப்படுத்தியும், கண்மூடித்தனமாகத் தாக்கி விமர்சித்தும்தான் பேசுகிறுர்கள், எழுதுகிறுர்கள். அதாவது அரசியல்துறையிலோ, கலைத்துறையிலோ உள்ள தலைவர்கள் கொலை, கொள்ளை கற்பழிப்பு, கள்ளச்சந்தை, ஊழல், (இலஞ்சம்) கையூட்டு முதலிய எவ்வளவு பெரிய தவறுகளைச் செய்தாலும் அவற்றைப் பெரிதுபடுத்தாமல்; அவைகளை எதிர்பாராமல் நிகழ்ந்தவைகளாகவும், தவிர்க்க முடியாதவைகளாகவும் விமர்சனம் செய்து நியாயப்படுத்தி வருகிறுர்கள்.

இதனுல் பொதுவாக மக்களும் மதத் துறையினரைத் தவிர மற்ற அனைத்துத் துறையினரும் எல்லாவிதமான தவறுகளையும் செய்யலாம்; அது குற்றமில்லை என்று எண்ணுகின்ற மனநிலையைப் பெற்றுவிட்டார்கள். எனவேதான், இன்றைக்கும் அனைத்துத் துறையினரும் தங்களை மதமறுப்பாளர்கள், வெறுப்பாளர்கள், எதிர்ப்பாளர்கள், சீர்திருத்தவாதிகள், நாத்திகவாதிகள், பகுத்தறிவுவாதிகள் என்று விளம்பரப்படுத்திக் கொள்வதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருக்கிறுர்கள்.

அதாவது, மதம் கூறுவது போல் தாங்கள் ஒழுக்கமாகவோ, நீதியாகவோ, நேர்மையாகவோ வாழ வேண்டியது அவசியமில்லை என்பதாகத் தங்களுக்கு ஒரு புதிய செல்வாக்கை உருவாக்கிக் கொண்டுள்ளார்கள். இதன் மூலம் இவர்கள் தங்களுக்கு மதத்தைக் கண்டிக்கவோ, திருத்தவோ உரிமையுண்டு; ஆனுல், மதத் தத்துவத்திற்கும், மதத் தலைவர்களுக்கும் தங்களைக் கண்டிக்க உரிமை இல்லை! இல்லை! இல்லை! என்று விளம்பரப்படுத்திக் கொண்டுள்ளார்கள்.

எனவேதான், அரசியல்வாதிகளும், சமுதாயவாதிகளும் என்றென்றும் கோயில் நிர்வாகங்களும், மடங்களின் நிர்வாகங்களும், மதத்தின் பெயரால் உள்ள அனைத்து நிர்வாகங்களும் தங்களுக்குக் கீழேயே, தங்களுக்கு அடங்கியனவாக இருக்க வேண்டும் என்று அனைத்து வகையான சட்டதிட்டச் செயல் கட்டுப்பாடுகளையும் வளர்த்து வருகிறார்கள். இந்த மாபெரும் சதித்திட்டத்திலிருந்து மதத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றால் அதற்குரிய அறிவு, ஆற்றல், செயல் திறம், தத்துவ உரம், கொள்கை வலிவு, குறிக்கோள் தெளிவு உலக அளவில் நம்மிடம்தான் இருக்கின்றது, இருக்கின்றது, இருக்கின்றது.

**[தொடர்ச்சி - குருதேவர் அறிக்கை: 28]**

அன்புச் சேவுக!

5. எனவே, நாம் இதுவரை மதத்துறையை இழித்தும், பழித்தும், சிதைத்தும், சீரழித்தும் வளவளர்ச்சியும், ஆட்சியும் பெற்றுச் சுகவாழ்வு வாழ்ந்து வந்த அனைத்துத் துறைகளையும் நேர்மையோடு நேரடியாக விமர்சித்து மதவிடுதலைக்கான போராட்டத்தைத் துவக்கியேயாக வேண்டும். இது ஓர் உலகந் தழுவிய போராட்டமாகவே வளர்ச்சி பெறும்! வளர்ச்சி பெறும்! வளர்ச்சி பெறும்! எனவே, உலக மதங்கள் அனைத்துக்கும் மூலமாகவும், முதலாகவும், தாயாகவும், தலைமையாகவும், வழியாகவும், வழிகாட்டியாகவும், வழித்துணையாகவும், கருவூலமாகவும் இருப்பதுதான் **சித்தர் நெறி எனும் நமது மெய்யான இந்து மதம்** (The True Induism is the Mother of all the Religions on this hemisphere).

எனவேதான் ஒரு தாய் தன்னுடைய சேய்களைக் காப்பாற்றுவது போல் நாம்தான் உலக மதங்கள் அனைத்தையும் நாத்திகர்களிடமிருந்தும், மத விரோத துரோகச் சத்திகளிடமிருந்தும், தன்னல வெறிபிடித்த மதப்போலிகளிடமிருந்தும், கூலிகளிடமிருந்தும், காலிகளிடமிருந்தும் காப்பாற்ற வேண்டும்! காப்பாற்ற வேண்டும்! காப்பாற்ற வேண்டும்!

6. நண்ப! மத விரோத துரோகச் சத்திகளின் ஈனச் செயல்களால்தான் நாத்திகர்கள், பகுத்தறிவுவாதிகள், சீர்திருத்தவாதிகள் என்பவர்கள்;

*'மதம் ஒரு மடமை';*
*'மதம் ஒரு கற்பனை';*
*'மதம் ஒரு கனவு';*
*'மதம் முன்னேற்றத்துக்குத் தடை';*
*'மதம் பயனற்றது';*
*'மதம் தேவையற்றது';*
*'மதம் அறிவுக்குப் புறம்பானது';*
*'மதம் புரியாத ஒன்று';*
*'மதம்தான் முதலாளித்துவத்தை வளர்க்கின்றது';*
*'மதம்தான் ஏழைகளை அடங்கியொடுங்கி ஏழைகளாகவே இருக்கச் செய்கிறது';*
*'மதம்தான் அடிமையுணர்வை வளர்க்கிறது';*
*'மதம் மனநோயாளிகளை உருவாக்குகிறது';*
*'மதம் கோழைகளை வளர்க்கிறது';*
*'மதம் ஆபாசங்களை வளர்க்கிறது';*
*'மதம் காட்டுமிராண்டித்தனங்களைக் காப்பாற்றுகிறது';*
*'மதம் மக்களை மயக்கும் ஒரு மயக்கப் பொருள்';*

*'மதம் சமுதாய விழிச்சிக்கும் எழிச்சிக்கும் தடையாக இருக்கிறது';*

*'மதம் உருவாக்கும் மதவெறிகளால்தான் அரசியலிலும், சமுதாயத்திலும் அமைதியின்மை விளைகின்றன';*

என்பன போன்ற எண்ணற்ற குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து மதத்தின் மீது சுமத்த முடிகிறது.

இதனை நன்கு தெரிந்தும், ஆராய்ந்து அறிந்தும்; முழுமையாகப் புரிந்தும், முறையாக உணர்ந்துமே....... செயல்படப் புறப்பட்டிருப்பவர்கள் நாம் என்ற விழிப்புணர்வும், நம்பிக்கையுணர்வும் நம்மிடையே எப்போதும் பசுமையாக இருக்க வேண்டும்! இருக்க வேண்டும்! இருக்க வேண்டும்! இப்பேருண்மைக்கேற்பவே நமது கருகுலத்திலும், குருகுலத்திலும், அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்களிலும், ஆய்வுக் கூட்டங்களிலும்........ முறையான பயிற்சிகள் முழுமையாக வழங்கப் படுகின்றன, வழங்கப் படுகின்றன, வழங்கப் படுகின்றன என்பதனை நம்மவர்களாவது நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

7. அதாவது, குருதேவராகிய யாம், நம்மவர்களையெல்லாம் மத விடுதலைப் போராட்டத்திற்காக மாவீரர்களாகத் தயாரிக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நமது நிறுவன நிருவாகக் கட்டமைப்புக்களிலும், நடவடிக்கைகளிலும் எமது நோக்கும் போக்கும் ஊக்கும் கண்டிப்பு மிக்கவைகளாக; கடுகடுப்பும் சிடுசிடுப்பும் உடையவைகளாக; ஈவுஇரக்கமற்ற விமர்சனங்களை வழங்குபவைகளாக; நெருப்பாறு ஓடுவது போல் இருப்பதனை அனைவரும் புரிந்து கொள்ள முடியும். இதற்கு தங்களைப் போன்ற முன்னணித் தளபதிகளும், வீரர்களும் (ஆண், பெண்

இருபாலரும்) எமக்கு உதவி செய்ய வேண்டும், உற்ற துணையாக இருக்க வேண்டும்.

8. நண்ப! மதத்துறையில் வாழும் ஒரு சில தனிமனிதர்கள் சுயநலத்தாலோ, உலகியலினாலோ தவறுகளைச் செய்கிறார்கள். ஆனால், அரசியல், கலை, சமுதாயம் முதலிய துறைகளைச் சார்ந்தவர்கள் தவறுகளையும், குற்றங்களையும் செய்வதற்காகவே வாழுகிறார்கள். அதாவது, மதத்துறையில் நூற்றுக்கு ஒருவர் அல்லது இருவர்தான் தவறு செய்பவர்களாக இருக்கிறார்கள். ஆனால், அரசியல், கலை, சமுதாயம் முதலிய துறைகளில் தவறு செய்யாதவர்கள்தான் நூற்றுக்கு ஒருவர் இருவர் என்றிருக்கிறார்கள். இந்தப் பேருண்மையை ஆபாசப் படுத்தாமல், பிறர் மனம் புண்படாமல், தேவையற்ற ஆரவாரம் இல்லாமல்...... மிகமிக நயமாகவும், நாகரீகமாகவும் அனைவருக்கும் எடுத்துக் கூறியே நமது மத விடுதலைப் போராட்டப் படையை உருவாக்க வேண்டும்! உருவாக்க வேண்டும்! உருவாக்க வேண்டும்! இதுவே எமது நிலை! நமது நிலை!

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

# இந்துமதமே தமிழரை உய்விக்கும்

பதினெண்சித்தர்கள் கணக்கற்ற கோடி ஆண்டுகளாக அண்டபேரண்டம் முழுவதும் பரவியுள்ள இந்து மதத்தை மிகமிகத் தெளிவாக வரையறுத்து ஏட்டுலகச் செய்தியாகவும் (Theoretical Information), நாட்டுலக நடைமுறை அநுபவ அறிவாகவும் (Practical Knowledge) தூய வாய்மைமிகு அமுதப் பைந்தமிழில் வழங்கி யுள்ளார்கள். இப் பேருண்மைகளை உணரமுடியாத குருடர்களும், உணர மறுக்கும் திருடர்களும்; அன்னியர்களிடம் கைக்கூலி பெற்றுக் கொண்டு தமிழுக்கும், தமிழாக உள்ள இந்து மதத்துக்கும் துணிந்து துரோகிகளாகச் செயல்படுகிறுர்கள். இவர்களை விடப் போலிகளும், நாத்திகர்களும் நல்லவர்களே. எனவே, இந்துமத மூலவர்களாகவும், காவலர்களாகவும் உள்ள தமிழர்கள் பொறுப்போடும், பொறுமையோடும் சிந்தித்துத் தங்களை இந்துக்கள் என்று உணர்ந்தும், உணர்த்தியும், உரையாற்றியும் செயல்பட வேண்டும்.

தமிழ்ப் பண்பாடு, தமிழ் நாகரீகம், தமிழின ஒற்றுமை, தமிழின உரிமை, தமிழகப் பெருமை, தமிழர் தன்மானம், தமிழின மானம், ... முதலிய அனைத்தும்; தமிழ்ப் பாரம்பரியத்தையே வளர்க்கும், விளக்கும் இந்துமதத்தில்தான் உள்ளன என்ற பேருண்மையில்தான் அனைத்து விடிவும் உள்ளன.

ஒவ்வொரு தமிழனும் சாதி, மதம், அரசியல் கட்சி, பதவி வெறி, பகை வெறி, புகழ் வெறி, ... முதலிய அனைத்தையும் கடந்து தன்னைத் தமிழினத்தான் என்று மட்டும் உணர்ந்து ஒன்றுதிரண்டு ஒற்றுமைப் பட்டால்தான் வருங்காலம் ஒளி நிறைந்ததாக இருக்கும். இந்த ஒற்றுமையை உருவாக்கும் அறிவியல் நிலையும், ஆற்றல் நிலையும், ஆர்வ நிலையும் தமிழ்மொழியில் உள்ள இந்துமதத்துக்குத்தான் உண்டு! உண்டு! உண்டு!

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல். அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

***ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குரு பாரம்பரியம்.



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினர். இவர் நல்ல ஆராய்ச்சிப் போக்கும், காலக் கணக்கீட்டு நோக்கும், வரலாற்றறிவும், இலக்கியக் கருத்துமுடைய சிறந்த நடுநிலைப் பேரறிஞராக வாழ்ந்து செயல்பட்டுள்ளார்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org www.gurudevar.org
Email: indhuism@gmail.com
www.induism.org www.books.gurudevar.org